செய்தி வெளியீடு எண்:15 நாள்:08.01.2021

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

தமிழ்நாட்டின் கலாச்சார மரபினை வெளிக்கொணரும் வகையில் தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளை தேவைக்கு ஏற்ப பெரிய அல்லது சிறிய அளவுகளில் ஒவ்வொரு ஆண்டும் பழங்கற்காலம், புதியகற்காலம், பெருங்கற்காலம், வரலாற்று தொடக்கக் காலம், கடல் சார் தொல்லியல் ஆராய்ச்சிகள், வடக்கு, மேற்கு, கிழக்கு, தெற்கு மண்டலங்களிலும் உள்ள தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2020–2021 ஆம் ஆண்டிற்கான கலை மற்றும் பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது தொல்லியல் துறை சார்பாக மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் பின்வரும் அறிவிப்பினை அறிவித்தார்கள்:–

> ‘‘தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்துவதன் மூலம், தமிழ்நாட்டின் சிறந்த பண்பாட்டு மரபினை அனைத்து மக்களுக்கும் வெளிச்சமிட்டு காட்ட இயலும் என்ற வகையில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ஏதுவாக, ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தொடரும் செலவினமான ரூ. 2 கோடியினை உயர்த்தி ரூ. 3 கோடியாக இந் நிதியாண்டு முதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்’’

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, **தமிழகத்தின்** தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நவீன

தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் தொடரும் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும் ரூ.2.00 கோடியினை ரூ.3.00 கோடியாக உயர்த்தி தமிழக அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

சுருக்கம்

அறிவிப்புகள் 2020 – 2021 – தொல்லியல் – தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல் – ஆண்டுதோறும் தொடரும் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும் ரூபாய் 2 கோடியினை ரூபாய் 3 கோடியாக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் (அதொ–2) துறை

அரசாணை(நிலை) எண். 193 | நாள். 30.12. 2020.

திருவள்ளுவர் ஆண்டு 2051,
சார்வரி மார்கழி 15
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண். 190, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் (அதொ–2) துறை, நாள். 12.12.2019.
2. தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையரின் கடித எண். இ1/1930/2020, நாள். 20.04.2020.

******

ஆணை

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தொல்லியல் துறையால், தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ஏதுவாக, 2019–2020 ஆம் ஆண்டு முதல் தொடரும் செலவினமாக ரூ. 2 கோடி நிதி ஒப்பளிப்பு செய்தும், மேற்படி பணியினை மேற்கொள்ளத் தேவைப்படும் தொகையினை முன்பணமாகப் பெற தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையருக்கு அனுமதி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டது.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2020–2021 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது, தொல்லியல் துறை சார்பாக மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் பின்வரும் அறிவிப்பினை அறிவித்தார்கள்:–

> "தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்துவதன் மூலம், தமிழ்நாட்டின் சிறந்த பண்பாட்டு மரபினை அனைத்து மக்களுக்கும் வெளிச்சமிட்டு காட்ட இயலும் என்ற வகையில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ஏதுவாக, ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தொடரும் செலவினமான ரூ. 2 கோடியினை உயர்த்தி ரூ. 3 கோடியாக இந் நிதியாண்டு முதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

த.பி.பா.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்கள், ஒரு நாட்டின் வரலாற்றினை எழுதுவதற்கு முதன்மைத் தரவுகளாக உள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள் போன்ற வரலாற்று ஆவணங்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மேற்கொள்ளப்படும் அகழாய்வுகளில் கண்டெடுக்கும் தொல்பொருட்களும் சான்றுகளாக அமைகின்றன எனவும், கள ஆய்வுகள் மற்றும் அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு கண்டறிதல் முதல் பொருள் விளக்கம் அறிதல் வரை பல்வேறு தொழில்நுட்பத் திறன்கள் தேவையாக உள்ளன எனவும், தொடர் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளை தேவைக்கு ஏற்ப பெரிய அல்லது சிறிய அளவுகளில் ஒவ்வொரு ஆண்டும் பழங்கற்காலம், புதியகற்காலம், பெருங்கற்காலம், வரலாற்று தொடக்கக் காலம், கடல் சார் தொல்லியல் ஆராய்ச்சிகள், வடக்கு, மேற்கு, கிழக்கு, தெற்கு மண்டலங்களிலும் உள்ள தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து, தமிழ்நாட்டின் கலாச்சார மரபினை வெளிக்கொணரும் வகையில் தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்வதற்கு ஆண்டுதோறும் தொடரும் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும் ரூ.2.00 கோடியினை ரூ.3.00 கோடியாக உயர்த்தியும் இப்பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் தொகையினை முன்பணமாகப் பெற அனுமதியும் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி (ம) தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து அதனை ஏற்று, தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ஏதுவாக, மேற்படி அறிவிப்பில் அறிவிக்கப்பட்ட தொகை ரூ. 3 கோடியில், எற்கனவே 2020 – 2021–ஆம் நிதியாண்டில் வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 2 கோடிக்கு அனுமதி வழங்கியும் இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டின்படி பணிகளை மேற்கொள்ள கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ. 1,00,00.000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், 2021–2022ஆம் நிதியாண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் தொடரும் செலவினமாக ரூ. 3,00,00,000/– (ரூபாய் மூன்று கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேற்படி பணிகளை மேற்கொள்ளத் தேவைப்படும் தொகையினை முன்பணமாக பெற தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

i. 2205-00 கலையும் பண்பாடும் 103 தொல் பொருளியல் ஆய்வு – மாநிலச் செலவினங்கள் AB பழங்காலச் சின்னங்கள் முதலியவற்றைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், பராமரித்தல் மற்றும் தொல்பொருள் புதையுண்ட இடங்களை அகழ்ந்தெடுத்தல் 342 – பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள் 01 – பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள் : ரூ. 80,00,000/–

IFHRMS (த.தொ.கு. 2205 00 103 AB 34201)
பழைய (த.தொ.கு 2205 00 103 AB 4201)

ii. 2205-00 கலையும் பண்பாடும் 103 தொல் பொருளியல் ஆய்வு – மாநிலச் செலவினங்கள் AB பழங்காலச் சின்னங்கள் முதலியவற்றைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், பராமரித்தல் மற்றும் தொல்பொருள் புதையுண்ட இடங்களை அகழ்ந்தெடுத்தல் 333 – தொழில்முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 03 . சிறப்புப்பணி ரூ 10,00,000/–

IFHRMS (த.தொ.எண். 2205 00 103 AB 33303)
பழைய (த.தொ.கு2205 00 103 DB 3337)

iii. 2205-00 கலையும் பண்பாடும் 103 தொல் பொருளியல் ஆய்வு – மாநிலச் செலவினங்கள் AB பழங்காலச் சின்னங்கள் முதலியவற்றைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், பராமரித்தல் மற்றும் தொல்பொருள் புதையுண்ட இடங்களை அகழ்ந்தெடுத்தல் 371 – அச்சிடும் செலவுகள் 01 – அச்சிடும் செலவுகள் ரூ. 10,00,000/–

IFHRMS (த.தொ.எண். 2205 00 103 AB 37101)
பழைய (த.தொ.கு 2205 00 103 AB 7100 )

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் தொகையான ரூ.1,00,00,000/– 2020–2021–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2020–21 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementatry Estimates 2020–2021) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி–II) துறைக்கு அனுப்புமாறு தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 47916/கல்வி–II/ 2020, நாள். 26.12.2020 –ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 1270 (ஆயிரத்து இருநூற்று எழுபது)

(ஆளுநரின் ஆணைப்படி)

விக்ரம் கபூர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

இணைப்பு

அரசாணை (நிலை) எண். 193, சுற்றுலா, பண்பாடு (ம)
அறநிலையங்கள் (அதொ–2)துறை, நாள். 30 .12.2020.

திட்ட மதிப்பீடு

| வ. எண். | பணிகளின் விவரம் | திட்ட மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தொல்லியல் இடங்களை அடையாளம் கண்டறிதல் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள நவீன தொழில்நுட்பங்களான ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு, காந்த அளவி மதிப்பாய்வு , ஆளில்லா வான்வழி வாகனம் மதிப்பாய்வு போன்ற பல்வேறு தொழில்நுட்ப ஆய்வுகளை பல்கலைக்கழகங்களின் தொலை உணர்வு துறை மற்றும் புவிகாந்தவியல் நிறுவனம் போன்ற புகழ் பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளுதல் (ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட இடங்கள் ) | 30,00,000 |
| 2 | விரிவான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுதல் பழங்கற்காலம், புதியகற்காலம், பெருங்கற்காலம் / இருப்புக் காலம் வரலாறு தொடக்க காலம், கடல் சார் தொல்லியல் ஆராய்ச்சிகள் அனைத்து மண்டலங்களிலும் மற்றும் தாமிரபரணி, வைகை, காவேரி, தென்பெண்ணை, பாலாறு முதலான ஆறுகளின் இரு மருங்கிலும் முனைப்பான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மேற்கொள்ளுதல் (ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட இடங்களில் முறையான, விரிவான மற்றும் தொடர் தொல்லியல் அகழாய்வுகள் தேவைக்கேற்ப பெரிய மற்றும் சிறிய அளவில் ) | 2, 00,00,000 |
| 3 | தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளில் வெளிக்கொணரப்படும் தொல்பொருட்களை அறிவியல் முறைப்படி கால அளவீட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளுதல்<br>கரிமக் கால அளவீடு, ஔிர்வு கால அளவீடு, பொருள் பகுப்பாய்வு, மக்கள் மரபியல், போலன் பகுப்பாய்வு தொல்–தாவரவியல், மூலக்கூறு உயிரியல் போன்ற பல்வேறு கால அளவீடுகள் மேற்கொள்ளுதல் | 30,00,000 |
| 4 | தொல்லியல் நிபுணர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளின் அறிக்கைகள் எழுதி தயாரித்தல்<br>ஒரு தொல்லியல் அறிக்கை எழுதி, தயாரிக்க தொல்லியல் நிபுணர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களுக்கு மதிப்பூதியமாக ரூ. 2,00,000/– வீதம் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து தொல்லியல் கள ஆய்வுகள் / அகழாய்வுகளின் அறிக்கைகள் தயாரித்தல். | 20,00,000 |
| 5 | தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளின் அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுதல் தொல்லியல் நிபுணர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களால் எழுதி தயாரிக்கப்பட்ட கள ஆய்வு மற்றும் அகழாய்வு அறிக்கைகளை புத்தக வடிவத்தில் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு அறிக்கை என்ற வீதத்தில் அச்சிட்டு வெளியிடுதல். | 20,00,000 |
| | மொத்தம் | 3,00,00,000 |

விக்ரம் கபூர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்